இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 121 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – கார்த்திகை 25 – வியாழக்கிழமை 11 டிசம்பர் 2025 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 121: Thiruvalluvar Year - 2056 - Karthigai 25 - Thursday 11 December 2025 - Trichy ★★ 12 Pages ₹ 5.00

### இந்தியாவை நோக்கிய நமது கூட்டு முயற்சிகளுக்கு

# சோனியா காந்தி தொடர்ந்து வலுவூட்ட வேண்டும்!

## பிறந்த நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, டிச. 11 -**

**காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்களின் பிறந்த நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில், "இந்தியாவை நோக்கிய நமது கூட்டு முயற்சிகளுக்கு அவரது கொள்கைப் பாதையும் வழிகாட்டுதலும் தொடர்ந்து வலுவூட்ட விழைகிறேன்" என்று பதிவிட்டு வாழ்த்தியுள்ளார்.**

காங்கிரஸ் கட்சி, நாடாளுமன்றக் குழுத் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்களின் பிறந்த நாளையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-



காங்கிரஸ் பேரியக்கத்தின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் திருமதி சோனியா காந்தி அம்மையார் அவர்களுக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துகள். தியாகம், தன்னலமற்ற பொதுவாழ்வுப் பயணம், மதச்சார்பின்மை மற்றும் அரசியலமைப்பு விழுமியங்களை நிலைநாட்டும் உறுதியைப் பிரதிபலிப்பதாக அவரது வாழ்க்கை அமைந்துள்ளது.

முற்போக்கான, அனைவருக்குமான இந்தியாவை நோக்கிய நமது கூட்டு முயற்சிகளுக்கு அவரது கொள்கைப் பாதையும் வழிகாட்டுதலும் தொடர்ந்து வலுவூட்டவேண்டும்எனவிழைகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

### கேரளாவில் உள்ளாட்சித் தேர்தலுக்கான

## முதற்கட்ட வாக்குப்பதிவு!

திருவனந்தபுரம், டிச.11 –

கேரளாவில் உள்ளாட்சி தேர்தலுக்கான வாக்குப்பதிவு தொடங்கி நடைபெற்று வருகிறது. கேரளாவில் மொத்தம் 14 மாவட்டங்கள் உள்ளன. அதில் 2 கட்டங்களாக உள்ளாட்சி தேர்தல் வாக்குப்பதிவு நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த 1 வாரகாலமாக நடைபெற்ற அனல் பறக்கும் பிரச்சாரத்தில் உள்ளாட்சி பிரதிநிதிகளாக போட்டியிடக்கூடிய வேட்பாளர்கள் பொதுமக்களிடம் வாக்குச் சேகரித்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் காலை 7 மணி முதல் வாக்குப்பதிவு தொடங்கி நடைபெற்றது.

திருவனந்தபுரம் முதல் எர்ணாகுளம் வரை இருக்கக்கூடிய 7 மாவட்டங்களில் இந்த வாக்குப் பதிவானது நடைபெற்றது.

இன்று திருச்சூரில் இருந்து காசர்கோடு வரை வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

நேற்று முன்தினம் காலை தொடங்கிய வாக்குப்பதிவில் மக்கள் உள்ளாட்சி பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க வாக்காளர்கள் காலை முதலே வரிசையில் நின்று வாக்களித்தனர்.

---

### உதகை, கூடலூர் ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து

## புதிய ஊராட்சி ஒன்றியங்கள் உருவாக்கம்!

### தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

நீலகிரி, டிச. 11 -

நீலகிரி மாவட்டத்தில் உதகை, கூடலூர் ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து புதிய ஊராட்சி ஒன்றியங்களை உருவாக்கி தமிழ்நாடு அரசு புதிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது. ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மறுசீரமைப்புக்காக அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உதகமண்டலம் மற்றும் கூடலூர் ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து, குந்தா மற்றும் பந்தலூர் என 2 புதிய ஊராட்சி ஒன்றியங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

26 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி உதகை ஊராட்சி, 12 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி குந்தா ஊராட்சி என பிரிக்கப்பட்டுள்ளது. கூடலூர் ஊராட்சி ஒன்றியத்தைப் பிரித்து பந்தலூர் ஊராட்சி ஒன்றியம் என புதிய ஊராட்சி ஒன்றியம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பு தொடர்பாக, பொதுமக்கள் தங்கள் கருத்துகள் மற்றும் ஆட்சேபனைகள் ஏதேனும் இருந்தால், அவற்றை 6 வார காலத்திற்குள் தெரிவிக்குமாறு அரசு அறிவித்துள்ளது.

---

### எஸ்.ஐ.ஆர். பணிகள்:

## கேரளாவில் மேலும் 2 நாட்கள் நீட்டிப்பு!

### உச்சநீதிமன்றம் உத்தரவு!

புதுடெல்லி, டிச. 11 -

கேரளாவில் நடைபெறும் எஸ்.ஐ.ஆர். பணிகளை மேலும் 2 நாட்கள் நீட்டிக்க தேர்தல் ஆணையத்திற்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

90.42 சதவீதம் எஸ்.ஐ.ஆர். விண்ணப்பங்கள் டிஜிட்டல்மயமாக்கப்பட்டுள்ளன; தேவைப்பட்டால் கூடுதல் அவகாசம் விதிக்கப்படும். ஏற்கனவே டிசம்பர் 18 வரை அவகாசம் வழங்கப்பட்ட நிலையில், மேலும் 2 நாட்கள் அவகாசம் வழங்க உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

---

### நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனை பதவி நீக்கம் செய்க!

# மக்களவை சபாநாயகரிடம் எதிர்க்கட்சித் தலைவர்கள் மனு!

## தீர்மானத்திற்கு ஆதரவாக 120–க்கும் மேற்பட்ட எம்.பி.க்கள் கையெழுத்து!

**புதுடெல்லி, டிச. 11-**

**உயர்நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதனை பதவி நீக்கம் செய்யக் கோரும் தீர்மானத்தை மக்களவை சபாநாயகரிடம் எதிர்க்கட்சித் தலைவர்கள் தாக்கல் செய்தனர். இத்தீர்மானத்திற்கு ஆதரவாக 120க்கும் மேற்பட்ட எம்.பி.க்கள் கையெழுத்திட்டுள்ளனர்.**

ஆண்டுதோறும் கார்த்திகை தீபத் தினத்தன்று திருப்பரங்குன்றம் மலையில் உச்சிப் பிள்ளையார் கோயிலின் தீபத் தூணில் தீபம் ஏற்றப்படும். ஆனால், இந்த ஆண்டு கார்த்திகை தீபம் திருப்பரங்குன்றம் மலை உச்சியில் ஏற்ற அனுமதிக்குமாறு உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் இந்து தமிழர் கட்சியின் ராம ரவிக்குமார் என்பவர் மனு தாக்கல் செய்தார்.



சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனை தகுதி நீக்கம் செய்வதற்கான இம்பீச்மெண்ட் தீர்மான நோட்டீஸை மக்களவை சபாநாயகர் ஓம்பிர்லாவிடம் திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி வழங்கினார். உடன் கழகப் பொருளாளரும் மக்களவை கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா மற்றும் பிரியங்கா காந்தி, அகிலேஷ் யாதவ், சு.வெங்கடேசன் உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் உள்ளனர்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி ஜி.ஆர் சுவாமிநாதன், கார்த்திகை தீபத் தினத்தன்று திருப்பரங்குன்றம் மலை உச்சியில் தீபம் ஏற்ற வேண்டும் என உத்தரவிட்டார். இதனால், திருப்பரங்குன்றத்தில் தேவையில்லாத சமூகப் பதற்றம் ஏற்படும் சூழல் உருவானது. நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதனின் உத்தரவை எதிர்த்து தமிழ்நாடு அரசு, உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளது.

இந்நிலையில், உயர்நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதனை பதவி நீக்கம் செய்யும் இம்பீச்மென்ட் தீர்மானத்தை மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவிடம் தி.மு.க. உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் தாக்கல் செய்தனர்.

இத்தீர்மானத்திற்கு ஆதரவாக 120க்கும் மேற்பட்ட எம்.பி.க்கள் கையெழுத்திட்டுள்ளனர். டி.ஆர்.பாலு, கனிமொழி கருணாநிதி, பிரியங்கா காந்தி, ஆ.ராசா, அகிலேஷ், சு.வெங்கடேசன் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சி எம்.பி.க்கள், சபாநாயகரை சந்தித்து நோட்டீஸ் அளித்தனர்.

---

### தமிழ்நாட்டில் இதுவரை

## 99.27% எஸ்.ஐ.ஆர். படிவங்கள் இணையத்தில் பதிவேற்றம்!

### தமிழக தலைமை தேர்தல் அதிகாரி தகவல்!

சென்னை, டிச. 11 -

இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்களின்படி, தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் கடந்த நவம்பர் மாதம் 4ம் தேதி தொடங்கி டிசம்பர் 4ம் தேதி வரை நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டது. தற்போது எஸ்ஐஆர் கணக்கீட்டு காலம் இன்று (11ம் தேதியுடன்) நிறைவடையும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இதைதொடர்ந்து வரைவு வாக்காளர் பட்டியல் வருகிற 16ம் தேதி வெளியிடப்படுகிறது.

இதை தொடர்ந்து 16.12.2025 முதல் 15.1.2026 வரை வாக்காளர்கள் பெயர் சேர்த்தல், நீக்குதல் அல்லது ஏற்கனவே உள்ள பதிவுகள் குறித்து மறுப்பு தெரிவிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாட்டில் 99.91 சதவீதம் எஸ்ஐஆர் கணக்கீட்டு படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, மொத்தமுள்ள 6,41,14,587 வாக்காளர்களில் 6,40,59,971 கோடி பேருக்கு கணக்கீட்டு படிவங்கள் விநியோகிக்கப்பட்டு விட்டன.

தமிழ்நாட்டில் இதுவரை 99.27 சதவீதம் (6 கோடியே 36 லட்சத்து 44 ஆயிரத்து 038) எஸ்ஐஆர் படிவங்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்றார்.

---

### ‘இண்டிகோ’ விமானப் பிரச்சினை:

## மக்களவையில் விவாதிக்க அனுமதி மறுப்பு!

### எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு!

புதுடெல்லி, டிச. 11 -

விமான போக்குவரத்து பிரச்சினை குறித்து விவாதிக்க வலியுறுத்தி நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் முழக்கங்களை எழுப்பினர். ஆனால் சபாநாயகர் அனுமதி மறுத்ததால் மக்களவையில் இருந்து அவர்கள் வெளிநடப்பு செய்தனர்.

நாடு முழுவதும் இண்டிகோ விமான சேவை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், நாடாளுமன்றத்தில் இந்த விவகாரம் இன்றும் எதிரொலித்தது. இது தொடர்பாக மக்களவையில் அறிக்கை தாக்கல் செய்து பேசிய ஒன்றிய அமைச்சர் ராம் மோகன் நாயுடு, இண்டிகோ விமான சேவை விவகாரத்தில் நிலைமை சீராகி வருவதாக தெரிவித்தார். விமான சேவை பாதிப்பு தொடர்பாக உரிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். இந்நிலையில், விமான போக்குவரத்து முடக்கம் குறித்த ஒன்றிய அமைச்சரின் பதில் போதுமானதாகவும், திருப்தி அளிப்பதாகவும் இல்லை என்று கூறி எதிர்கட்சி எம்.பி.,க்கள் முழக்கங்களை எழுப்பினர். விமான போக்குவரத்து பிரச்சினை குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும் என்று வலியுறுத்தினர். ஆனால் விவாதம் நடத்த அனுமதி மறுக்கப்பட்டது. இதனால் எதிர்க்கட்சிகள் எம்.பி.,க்கள் மக்களவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

---

## தமிழகத்தில் மழை தொடரும்!

சென்னை, டிச. 11 –

தமிழகத்தை ஒட்டிய வங்கக் கடல் பகுதியில் குறைந்த காற்றமுத்த தாழ்வு பகுதி உருவாகிறது என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதனால் தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் மழை தொடரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதியில் கனமழை பொழியும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

---

### யானைகளை இடமாற்றம் செய்வதற்கான

## விரிவான வழிகாட்டுதலை உருவாக்க நிபுணர் குழு!

### தமிழக அரசு அமைத்தது!

சென்னை, டிச. 11 -

யானைகளை இடமாற்றம் செய்யும்போது கடைப்பிடிக்க வேண்டிய விரிவான வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்க நிபுணர்குழுவை அரசு அமைத்துள்ளது.

இதுகுறித்து, வனத்துறை செயலர் சுப்ரியா சாஹு வெளியிட்ட செய்திக்குறிப்பில்,

கடந்த சில மாதங்களில், 2 காட்டு யானைகள் இடமாற்றம் செய்யப்பட்டபோது உயிரிழந்ததன் மூலம் தற்போதுள்ள வழிகாட்டு நெறிமுறைகளில் மாற்றம் செய்யப்பட வேண்டிய சூழல் எழுந்துள்ளது.

யானைகளை இடமாற்றம் செய்யும் நடைமுறைகளில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்வதற்காக, வனவிலங்குகளைப் பிடிப்பது, இடமாற்றம் செய்வது மற்றும் விடுவிப்பது குறித்த தெளிவான நெறிமுறைகளை வகுக்க வேண்டியது அவசியம்.

குறிப்பாக யானைகளை இடமாற்றம் செய்வது பற்றிய தெளிவான நடைமுறைகளை வகுக்க மாநில அளவிலான நிபுணர் குழுவை அரசு அமைத்துள்ளது.